தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1992 பிப்ரவரி 6, வியாழக்கிழமை.

தை 23, பிரஜோற்பத்தி — திருவள்ளுவர் ஆண்டு 2023.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் ''.

அறிவாற்றல் மிக்க பெரியோர்களை எல்லாம் பேணிப் போற்றி அவர்களைத் தம்மவர்களாக்கிக் கொள்ளுதல் பெறற்கு அரிய பேறுகள் எல்லாவற்றுள் சிறந்ததாகும்.

1. வினாக்கள் — விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள். வினா எண். 61, திரு. செ. பெருமாள், மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 62-வது வினாவையும் சேர்த்து எடுத்துக் கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர், அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க, ஒரேபொருள் பற்றியதாக இருக்கிற காரணத்தால், இரண்டு வினாக்களும் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

வினா எண். 62, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

61.

ஜவ்வாது மலையில் பழங்குடியினர் தொகுதி.

(*) 3988,—திரு. செ. பெருமாள் :
மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஜவ்வாது மலையை மையமாக வைத்து ஒரு பழங்குடியினர் தொகுதியை உருவாக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?